(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 209.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2012 செத்தெம்பர் 18, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0657/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) நாட்டின் 30 மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எவை என்பதையும்;

(ii) அவை அரசுக்குச் சொந்தமான 30 மிகப் பெரிய தொழில்முயற்சிகளாக எவ்வாறு கருதப்படுகின்றன என்பதையும்;

(iii) ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம், மற்றும் தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்தினதும் இற்றைவரையிலான கடந்த 5 வருடங்களுக்கான இலாப, நட்டத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(v) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் சந்தைப் பங்கு எவ்வளவு என்தையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்சொன்ன தொழில்முயற்சிகளில், நட்டத்தில் இயங்கும் ஒவ்வொன்றையும் இலாபமீட்டும் தொழில் முயற்சிகளாக்க முடியுமா எனக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1364/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய மடல – தம்முல்ல – கரதின பிரதான வீதி சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கை உரிய தரத்திற்கமைவாக இடம்பெறவில்லையென மக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் மூன்று கிலோமீற்றர் தூரத்தை அபிவிருத்தி செய்வதற்கு செலவாகியுள்ள மொத்த பணத்தொகை யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் ஏற்புடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(iv) கேள்விப்பத்திரம் அளிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப்பத்திர விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1724/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியில் இன்டஸ்ரியல் பினான்ஸ் லிமிட்றட் (Industrial Finance Limited) என்ற பெயரில் வங்கியல்லாத நிதி நிறுவனமொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதா;

(ii) அது பதிவுசெய்யப்பட்ட திகதி யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் நிதித்துறையில் அவர்களது அனுபவங்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பபிடுவாரா?

(ஆ) (i) இந்த கம்பெனி இதற்கு முன்னர் வேறு கம்பனியொன்றுக்கு சொந்தமாக இருந்ததா;

(ii) அவ்வாறெனின் அந்த கம்பனியின் பெயர் யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்ச சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) I.F.L கம்பனியில் தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அதில் பணம் வைப்பிலிட்டுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) 2011 மார்ச் 31ஆந் திகதிக்கு அந்த கம்பனிக்கு உரித்தாக இருந்த வைப்புகளின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2503/ '12

4.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தில் காணாமற்போன அல்லது கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011ஆம் ஆண்டாகின்றபோது பதிவுசெய்யப்பட்டிருந்த பத்திரிகைகள், வானொலிச் சேவைகள், தொலைக்காட்சிச் சேவைகள் மற்றும் இணையத்தளங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2005ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தடைசெய்யப்பட்ட ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊடக நிறுவனமும் தடைசெய்யப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2624/ ’12

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 இல் எரிபொருள் விலை அதிகரித்த போது,

(i) மக்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், குடும்பமொன்றுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானியத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மண்ணெண்ணெய் மானியத்தை வழங்குவதற்காக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iv) அந்த மண்ணெண்ணெய் மானியத்தை வழங்க 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) டீசல் மானியம் வழங்கப்பட்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vii) அவ்வாறெனின், 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்க ஒதுக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறியவாறு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியங்கள் வழங்கப்படவில்லையெனில், 2007 தொடக்கம் இதுவரை மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2720/ '12

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள பிரதான மற்றும் துணை நீர்க் குழாய்கள் மூலம் ஏற்படும் விரயம் மற்றும் வீணாதல் காரணமாக வருடாந்தம் நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை இழக்கும் நீரின் அளவு கணிப்பிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில் மேற்கூறியவாறு ஒவ்வாரு மாகாணத்திலும் வருடாந்தம் இழக்கும் குழாய் நீரின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய நீர் விரயத்தைக் குறைத்துக் கொள்வதற்காக நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2776/ '12

7.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பண்டாரகம பிரதேச சபை பண்டாரகம நிவ்டாவ பிரதேசத்தில் இயந்திர சாதனங்களின் உதவியுடன் உணவுகளை உலர்த்தி பொதியிடும் கருத்திட்டமொன்றுக்காக கட்டடமொன்றை நிர்மாணித்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஆமெனில், அக்கருத்திட்டம்

(i) ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) தொடர்பில் முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மூலம் தற்போது வழங்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இது வரை ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1841/ '11

8.

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பமுணுகொட்டுவ பிரதேச செயலகப் பிரிவின் கொத்மிட்டியனவில் கொலமுணு ஓயாவுக்கு குறுக்காக பாலமொன்றை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டு ஓராண்டுக்கும் மேற்பட்ட காலம் கழிந்துள்ள போதிலும் இற்றைவரை அதன் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) அதன் பொருட்டு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கொலமுனு ஓயாவுக்கு குறுக்காக நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்ட பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2131/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எவரேனுமொருவரால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் அவர் யார் என்பதையும்;

(iii) அவர் எடுத்துச் சென்றுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந்த வாகனங்களின் வகை மற்றும் பதிவிலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்ட திகதி யாது என்பதையும்;

(vi) வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மேற்படி வாகனங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டிருப்பின் அத்திகதியும் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசாங்க வாகனங்களை மேலே கூறப்பட்டவாறு எடுத்துச் செல்லல் 2004.01.08 ஆந் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணானதென்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாகனங்களை எடுத்துச் சென்றமை தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2185/ '11

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமானசேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனி தொடர்பாக,

(i) உபயோகிக்கப்பட்ட மொத்த மூலதனம், ஒதுக்கங்கள் ஆகியவற்றையும்;

(ii) இலாபமா அல்லது நட்டமா என்பதையும்;

(iii) மொத்த பணியாள்தொகுதி உறுப்பினர்களுக்குரிய செலவினம், ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியவற்றையும்;

(iv) பிரயாணி ஒருவருக்கான செலவினத்தையும்;

(v) அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட தீர்வைகள் அல்லது வரிகளின் தொகையையும்

வருட வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வழங்கப்பட்ட மூலதனம், கடன்கள், உத்தரவாதங்கள் ஆகியவற்றையும்;

(ii) அவற்றின் விபரங்களையும்;

(iii) அவற்றை வழங்குவதற்குரிய நோக்கத்தையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் இற்றைவரை நிலுவையாக உள்ள மொத்தக் கடன்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2626/ '12

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஒக்டோபர் 18ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் ஏற்பாடுகள் 1996 யூன் 07 ஆம் திகதி தொடக்கம் அமுல்படக்கூடியவாறு மக்கள் வங்கி ஊழியர்களுக்கு ஏற்புடைமையாகின்றது என்பதையும்;

(ii) இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி தனது ஊழியர்களுக்கு இச்சுற்றறிக்கையை ஏற்புடைமையாக்கவில்லை என்பதையும்;

(iii) அரச சேவையின் விசேட தேவைக்காக செயற்படுத்தப்பட்ட 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை 1996 திசெம்பர் 23ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டதென்பதையும்;

(iv) அவ்வாறாயினும், பொது நிருவாக சுற்றறிக்கை இல: 44/90 இன் அடிப்படையில் மக்கள் வங்கி செயற்படுத்திய ஓய்வூதியத் திட்டம் இதுவரை இவ்வங்கியினால் கொண்டு நடாத்தப்பட்டுவருகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்ட திகதி தொடக்கம் செயற்படக் கூடியவாறு 1996 யூன் 7ஆம் திகதிக்கு முன்பிருந்த ஓய்வூதியத் திட்டத்தை மக்கள் வங்கி ஊழியர்களுக்கு மீண்டும் செயற்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2779/ '12

12.

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கையில் வானொலிச் சேவைகளை நடாத்துவதற்காக,

(i) வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்துக்காகவும் மேற்படி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1842/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள யால விலேஜ் ஹோட்டலுக்கு எல்லைப் புறத்தில் அமைந்துள்ள யால சரணாலயத்திற்குச் சொந்தமான பாரிய நிலப்பரப்பில் சுற்றுலாத்துறை வலயமொன்றை உருவாக்கும் திட்டமெதுவும் உள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காகப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ள நிலப்பரப்பு எவ்வளவு;

(iii) மேற்படி சுற்றுலாத்துறை வலயத்திற்காக சுவீகரிக்கப்படுகின்ற காணியை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான திட்டமெதுவும் உள்ளதா;

(iv) ஆமெனில், அக்காணி குத்தகைக்கு வழங்கப்படுகின்ற காலவரையறை யாது;

(v) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணி குத்தகைகக்கு வழங்கப்படுமாயின், அந்த முதலீட்டாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் உரித்தாயுள்ள நாடுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) யால சரணாலயத்திற்குரிய இப்பிரதேசத்தில் ஏக்கரொன்றை குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற பணத் தொகை யாது;

(ii) மேற்படி காணியைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக அரசாங்கம் எதிர்பார்க்கின்ற வருமானம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவாறு யால சரணாலயத்தை சுற்றுலாத்துறை வலயமொன்றாக மாற்றுதல் தாவரங்களினதும் வனசீவராசிகளினதும் உயிர்வாழ்வுக்கு தீவிர அச்சுறுத்தலாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கையொன்றை மேற்கொள்ளக் காரணம் யாது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2132/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதிகரிக்கப்பட்டுள்ள அளவு எவ்வளவென்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், இவ்வங்கீகாரத்தை சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) மேற்படி கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுநிருபத்தை சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரியின் பெயர் மற்றும் பதவி யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2186/ '11

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளின் எண்ணிக்கையையும்;

(ii) கம்பனி ஒன்றிற்கான மற்றும் ஒட்டுமொத்தக் கம்பனிகளின் மொத்த இலாபம் அல்லது நட்டத்தையும்

வருடவாரியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த மூன்று வருடங்களில்,

(i) அரசாங்கம் பணம் அல்லது கடன்களை வழங்கியுள்ளதா அல்லது அக்கம்பனிகளிலிருந்து நிலுவைகளாக உள்ளவற்றைப் பதிவழிப்புச் செய்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், மேலே சொல்லப்பட்டவாறு வழங்கப்பட்ட தொகையையும்;

(iii) அரசாங்கம் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து காணியைப் பெற்றுக்கொள்கின்றதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், பெற்றுக்கொள்ளப்பட்ட ஏக்கர்களின் எண்ணிக்கையையும்;

(v) காணி பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நோக்கத்தையும்

வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) அரசாங்கம் பெருந்தோட்டக் கம்பனிகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் ஒரு முறை ஒழுங்குபடுத்துமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 மே மாதம் 11 ஆம் திகதிய 1757/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 யூன் மாதம் 19 ஆம் திகதிய 1763/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 யூலை மாதம் 13 ஆம் திகதிய 1766/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 யூலை மாதம் 19 ஆம் திகதிய 1767/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2012 யூலை 19ஆம் திகதிய 1767/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 ஏப்பிறல் மாதம் 27 ஆம் திகதிய 1755/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 மே மாதம் 18 ஆம் திகதிய 1758/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 17.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.